ஆய்வு : ஹைக்கூ கவிதைகளில் நாட்டுப்புறவியல் கூறுகள்

Written by - முனைவர் சா.சதீஸ்குமார், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கோவை.
Saturday, 07 November 2020 09:22 - Last Updated Saturday, 07 November 2020 09:27

முன்னுரை :

நாட்டுப்புறவியல் என்பது கிராமப்புறம் சார்ந்த இயற்கை எழில்கள், கிராம மக்களின் வீடுகள், தெருக்கள்,மரம்,செடி, கொடிகள், குளம்,குட்டைகள், பறவைகள், அம்மக்களின் இயல்பான வாழ்க்கைப் பதிவுகளையும் கிராமப்புற மக்களின் தெய்வ வழிபாட்டு முறைகள், உணவு முறைகள், விளையாட்டுகள், தாலாட்டுப் பாடல் முதல் ஒப்பாரிப் பாடல் வரையிலான இன்ப – துன்ப நிகழ்ச்சிகளையும் அவர்களின் வாழ்வியலுக்குத் தேவையான வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்களில் ஏற்படும் விரயங்கள்,அவர்களின் பேச்சு வழக்கு, திருவிழாக்கள் போன்ற அனைத்து நிலைகளிலும் அனுபவம் சார்ந்த கவிஞர்கள் தங்கள் ஐக்கூக் கவிதைகளில் பாடுபொருளாக எவ்வாறு உருவகித்துப் பதிவு செய்துள்ளனர் என்பதைப் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

உத்தி

மனித வாழ்க்கையின் அனுபவக் கூறுகளை ஒழுங்குபடுத்தி, ஒன்றுபடுத்தி ஒரு முழுமை வடிவம் தந்து நாம் முற்றும் உணருமாறு செய்பவர்களே கவிஞர்களாவர். கவிஞர்கள் கவிதைகளைப் புனையும் கற்பனைகள் பலப் பல. அவர்களின் உள்ளத்தின் வெளிப்பாடுகளையே அவர்களின் எழுதுகோல் மையும் சிந்துகின்றது. அவற்றைப் படிப்போரைச் சிந்திக்க வைக்கவும் செய்கின்றன. கவிஞர்களின் நடை வேறுபடுவதுடன் மொழிநடையும் வேறுபடுகின்றது. ஆனால் மையக் கருத்து என்பது ஒன்றே.

நாட்டுப்புற இயல்

நாட்டுப்புற மக்களின் கலைகளையும், இலக்கியங்களையும் நம்பிக்கைகளையும் பற்றி அறிந்து கொள்ளும் இயலே நாட்டுப்புற இயலாகும்.நாட்டுப்புறம் என்பது கல்வி பெறாத சிற்றூர்ப் பகுதிகளையே குறிக்கும். இவர்களைக் கிராமத்தான், பட்டிக்காட்டான்,பாமரன்,நாட்டுப்புறத்தான், ஊர்மகன் எனப் பலவாறு பெயரிட்டு அழைக்கின்றனர். இவை அனைத்தும் சிற்றூர்ப் புறங்களில் வாழும் மக்களையே குறிக்கின்றன. ஆங்கிலத்தில் நாட்டுப்புற இயலை Folklore என்று அழைக்கின்றனர். Folk + lore என்ற சொற்சேர்க்கை தான் Folklore என்று ஆகியிருக்கிறது. A New English Dicitionary இதற்குப் பொருள் கூறும் போது, The traditional beliefs, Legends and customs , Current among the common people. The study of these Popular, Antiquities or Popular Literature (A New English Dicitionary, P.no 330) என்று குறிப்பிடுகின்றது.

1 / 5

ஆய்வு : ஹைக்கூ கவிதைகளில் நாட்டுப்புறவியல் கூறுகள்

Written by - முனைவர் சா.சதீஸ்குமார், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கோவை.
Saturday, 07 November 2020 09:22 - Last Updated Saturday, 07 November 2020 09:27

சிற்றூர் கிராமம்

இயற்கை அன்னை தன் முகம் பார்த்துக் கொள்ள சிற்றூர் என்னும் கண்ணாடியைத் தான் எடுத்துக் கொள்கிறாள். அவள் ஒப்பனை உருப்பெறுவதும் இதன் மூலம் தான். இத்தகைய சிற்றூரின் மண்ணிலே தவழும் மக்கள் அனைவரும் அந்த இறைவனின் புதல்வர்களாகவே கருதப்படுகின்றனர்.

ஊர்ப்புறங்களின் அழகே அவை செல்லும் பாதையில் தான் இருக்கின்றன. நாகரீகம் முழுவதும் பரவாத அக்காலக் கட்டத்தில் சாலை வசதிகள் மேம்படுத்தப்படாத பள்ளம் - மேடுகளில் கால் தடம் பதித்து. சிறிது தொலைவு நடந்து சென்று, ஊருக்குள் நுழைவதே மகிழ்வான அனுபவமாகும். அந்த அனுபவத்தைச் சொற்களால் விளக்கிட இயலாது. அதை உணர்ந்தவர்களால் தான் உணரமுடியும்.

" ஒற்றுமையின் உருவம்
கிராமங்களில்
ஒற்றையடிப் பாதை...!" (பூ.பூ.வா, ப.20-5)

எனும் கவிதை,சிற்றூர்ப் புறங்களில் காணப்படும் அந்த ஒற்றையடிப் பாதையில் வரிசையாக நடந்து செல்லும் போதுதான் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாடின்மையைக் காணமுடிவதைக் காட்சிப்படுத்துகிறது. இதே போல வண்டி மாடுகள் செல்லும் பாதையின் அழகினைக் கூறுகிறது.

குடிசை வீடுகள்

சிற்றூர்ப் புறங்களின் வனப்பே, அவர்கள் குடியிருக்கும் வீடுகளிலும், அவர்கள் பேசும் பேச்சுக்களிலும் தான் உள்ளது. அவர்தம் குடிசை வீடுகள், வறுமையை எதிரொலிப்பதாய் இருப்பினும் அவர்கள் குடியிருப்பதற்கே மட்டுமல்ல பறவைகளும் கூடுகட்ட அது இடம் கொடுப்பதாக அமையும்.

"நகரும் நிலா.....
கொஞ்சம் தான் தெரிகிறது....
கூரைப் பொத்தல் வழியே...." (பிரியும் நேரத்தில் இ ப.34-1)

மரம் , குளம்

சிற்றூர்களுக்கு ஆணிவேராக இருப்பவை அங்கே இருக்கின்ற மரங்களும் ஏரி, கண்மாய், குளம், குட்டைகளுமே ஆகும். ஊருக்குள் நுழைந்ததும் அங்கே இருக்கும் அடர்ந்த மரங்களும் அதில் வாழும் பறவைகள் எழுப்புகின்ற ஒலிகளும் சில்லென்ற காற்றும் அக்காற்றினைத் தருகின்ற மரத்தடியில் அமர்ந்து இளைப்பாறச் சொல்லும் மரங்களும் சிற்றூர்களில் இன்றியமையாத ஒன்றாகும்.

" பிறந்த மண்ணில்
ஒற்றைக் காலில் தவம்...
சாகும் வரை மரம்...." (மரவரம்,ப.8-5)

எனும் கவிதை, தனக்கு மரணம் வரும் வரையில் தான் பிறந்த ஊரிலேயே இருக்க நினைக்கின்ற மரத்தைப் போன்றே சிற்றூர்களில் பிறந்து வளர்ந்த நம் முன்னோர்கள் தாங்கள் இருக்கும் வரை அம்மண்ணை விட்டுப் பிரியக் கூடாது என நினைப்பதை

2 / 5

Written by - மனவை. சா.சதீ ஸ்கமார், உதவிப்பரோசிரியர், தமிழ்த்தறை, நரே கலை மற்றம் அறிவியல் கல்லரி (தன்னாட்சி), கோவை.
Saturday, 07 November 2020 09:22 - Last Updated Saturday, 07 November 2020 09:27

நமக்க எடாத தரகை கிறத.

[illegible]

ஆதியில் வாழ்ந்த மனிதன் இயற்கசை சீ ற்றங்களகைக் கண்ட அஞ்சி நீ ர், தீ , இடி, பரெமழை, நிலநடக்கம் பான்றவற்றை அவற்றவைழிபடத் தொடங்கிய காலம் மதல் தமிழர்களின் வாழ்கயில் வழிபாட வரே[illegible]ன்றியத. அதன் பின்னர் கற்களை நட்ட,அவற்றை வழிபட்டான். பின்னர் கற்களில் சிலகைளை வடெ்டி,அவற்றிற்க மன்ற நரேப் ப[illegible]சகைளம்,வழிபாடகளம் சயெ்த வழிபடத் தொடங்கினான். அவ்வாற தொடர்ந்ததே இறவைழிபாட ஆகம்.

[illegible]

பரெந்தயெ்வங்களில் ஒன்றாக கரதப்பட்ட பிள்ளையாரை வணே்டவோர்க்க விரம்பியதயைலெ்லாம் வழங்கம் கடவள் என்ற மக்கள் பிள்ளையாரிடம் தங்களத மறயீ டகளை வபை்பதணே்ட. பிள்ளையாரக்க அரச மரத்தடியே மதன்மயான இடம் எனக் கரதவர். அனதை்தக் கோவில்களிலம் பிள்ளையாரக்கனெ்றே தனி இடமம்இ சிறப்பப் ப[illegible]சகைளம் சயெ்த வழிபடம் வழக்கம் இரந்த வரகிறத. சிலர் எந்தச் சயெலசை் சயெ்வதாயினம் பிள்ளையார் சழியிட்ட அதன் பின்னர் சயெ்தால் அதில் வறெ்றி கிட்டம் என்ற நம்பிக்கயெம் நிலவி வரகின்றத.

சிற தயெ்வமாக ஐயனார் என்னம் காவல் தயெ்வத்தகை கறிப்பிடகின்றனர். ஐயனார் சிலை என்றதமே கயைில் வடெ்டரிவாள் ,மறக்க மீ சை, பரெத்த கண்கள்,பரமனான பரிய உரவம்,கதிரை என அனதை்த அமபை்பகளடனம் காவல் தயெ்வத்திற்கே உரிய மிடக்கான தோற்றத்தடனம் காணப்படம் என்ற நம்பிக்கை மக்கள் மனத்தில் நீ ங்காத இடம் பறெ்றள்ளத.

ஊர்ப் பறங்களில் வாழம் மக்களிடையே சாதி – சமயங்களால் சில சமயங்களில் இறவைழிபாட்டின் பாேத இடையறகள் நிகழ்வதம் உண்ட. இதனை,

“ திரவிழாவில் கலவரம்...
உரண்டன தலகைள்...
உதவிக்க ஐயனாரின் அரிவாள்!” (நி.சோ.வா.ப.16-1)

எனம் கவிதை எடத்தக்காட்டகிறத.

[illegible]

பணெ் தயெ்வங்களள் மதன்மதை் தயெ்வமாக விளங்கம் மாரியம்மனக்க ஊர்தோறம் உள்ள கோவில்களில் ஆண்டதோறம் தீ மிதித் திரவிழா மற்றம் இரபத்தொர நாள் நோன்ப சாட்டம் நிகழ்வகளம் இடம்பறெவத வழக்கம். மாரியம்மனக்க பத்ரகாளி அம்மன், உச்சிமாகாளி அம்மன்,காளியம்மன், அழக நாச்சியம்மன்,கரடியம்மாள், உமயைம்மாள், கோணியம்மாள் எனப் பல பயெர்களிட்ட வணங்கி வரகின்றனர்.

அம்மனக்க நோன்ப சாட்டம் நாள்களில் மக்களக்க பரியம்மை, சின்னம்மை எனப்படம் வகெ்கை நோய்கள் ஏற்படவதம் உண்ட. இக்காலங்களில் இந்நோய் ஏற்பட்டவர்கள் வளெ்ளை ஆடயைை உடத்தி,வபே்பந்தழகைளை விரித்த,அதில் படத்தறங்கவத வழக்கம். மாரியம்மனக்க ஆயிரம் கண்ணடயைவள் என்ற பயெரம் உண்ட. மழை வணே்டி மாரியம்மனக்கத் திரவிழா எடக்கம் மக்கள்,மரம் வளர்தால்

ஆய்வு : ஹைக்கூ கவிதைகளில் நாட்டுப்புறவியல் கூறுகள்

Written by - முனைவர் சா.சதீஸ் குமார், உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை, நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கோவை.
Saturday, 07 November 2020 09:22 - Last Updated Saturday, 07 November 2020 09:27

மழை பெய்யும் என்பதை அறியாத மூட நம்பிக்கையில் உள்ளனரே என்பதைக் கீழ்க்காணும் கவிதை உணர்த்துகிறது.

“மரங்களை அழித்துவிட்டு
மாரிக்கு
மாரியம்மன் திருவிழாவா?” (கி.தி.இ.,ப.51-4)

மக்கள், தெய்வத்தின் மீது வைக்கும் நம்பிக்கையை மரங்கள் மீது கொண்டு, மரங்களை வளர்த்தாலே மழை பெருகும் என்பதை நினைவூட்டுகிறது.

வேளாண்மை

பருவத்தே பயிர் செய், ஆடிப்பட்டம் தேடி விதை என்பவை உழவு பற்றிய பழமொழிகள் ஆகும். விதை விதைப்பதற்கு முன் உழவன், நிலத்தின் மண் வளத்தை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். மண்ணின் தன்மை அறிந்து, பயிர்களைப் பயிரிடுவதே உழவனின் சிறந்த அறிவுக்கு எடுத்துக்காட்டாகும். அத்தகைய உழவனின் புகழைப் பின்வரும் கவிதையில் காணமுடிகிறது.

“ கடவுளைத் தேடுகிறார்கள்...
நான் பார்த்துவிட்டேன்....
இதோ! வயல் வெளியில்...!” (மழைப்பாட்டு, ப.68-1)

கடவுளைக் காணவில்லை என்று தேடுவோர், வயலில் உழுதுகொண்டிருக்கும் உழவன் தான் கடவுள் என்பதை உணரவில்லை என்று மேற்காண் கவிதை உணர்த்துகிறது.

வயல் வரப்புகள்

காலமறிந்து நன்றாய் நீர்ப்பாய்ச்சியும் உரமிட்டும் வளர்ந்த பயிர், அந்நிலத்தில் காணலாகும் கண்கொள்ளாக் காட்சியை,

“ வனப்பான உடல்....
நடவுக்கால் இணைப்பு...
வரப்பு....” (மழைப்பாட்டு, ப.39-1)

எனும் கவிதையில் உணரமுடிகிறது.

நாற்று நடுதல்

நாற்று நடும் பணியில் பெண்கள் ஈடுபடுவதை,

“கிராம வயல்களில்
குனிந்த பெண்கள்
கூலியைப் போல...!” (மேலது, ப.57-5)

எனும் ஐக்கூ காட்சிப்படுத்துகிறது.

முடிவுரை

ஹைக்கூ கவிதைகளில் நாட்டுப்புறவியல் கூறுகளில் நாட்டுப்புறவியலின் விளக்கம்,

4 / 5

ஆய்வு : ஹைக்கூ கவிதைகளில் நாட்டுப்புறவியல் கூறுகள்

Written by - முனைவர் சா.சதீஸ்குமார், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கோவை.
Saturday, 07 November 2020 09:22 - Last Updated Saturday, 07 November 2020 09:27

சிற்றூர்ப் புறங்களில் காணலாகும் வீடுகளின் அமைப்பு, இயற்கைச் சூழல், உழவர்களின் வாழ்க்கை முறை, அவர்கள் அடைகின்ற துயரநிலைகள், நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகள் அவற்றில் தெய்வங்களின் பங்கு போன்றவை பற்றி கவிஞர்களின் பார்வை வழி பதிவு செய்யப்பட்டுள்ளது.

பார்வை நூல்கள்

1. A New English Dicitionary
2. பூப்பூக்கும் வானம் - உதயகுமாரன்.வீ
3. பிரியும் நேரத்தில் - நாணற்காடன்
4. மரவரம் - வசீகரன்
5. நிலவுக்கு சோறூட்டும் வானம் - கவிதைத் தம்பி
6. கிளைக்குத் திரும்பும் இலைகள் - பாரியன்பன்
7. மழைப்பாட்டு – தமிழ்மதி

5 / 5